**Dept. Of TAMIL**
**Newsletter - 2021** **Vol.1**

**SRM**
**INSTITUTE OF SCIENCE & TECHNOLOGY**
*(Deemed to be University u/s 3 of UGC Act, 1956)*

# Department of Tamil



## College of Science and Humanities
## SRM Institute of Science and Technology
## Kattankulathur

**தமிழ்த்துறை**

காட்டாங்குளத்தூர் வளாக எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் கலையியல் புலத் தமிழ்த்துறை 2003 ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. உயிரி தொழில் நுட்பத் துறைக்குத் தமிழை ஒரு மொழிப்பாடப் பாடமாகக் கொண்டு தொடங்கப்பட்ட தமிழ்த்துறை இன்று பதினெட்டு துறைகளுக்கு மேல் முதலாம் ஆண்டு மாணவர்களுக்குத் தமிழ் பயிற்றுவித்து வருகிறது. தமிழில் முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்கள் இருந்ததால்

தமிழ்த்துறை ஆராய்ச்சித் துறையாகவும் இன்றளவும் செயல்பட்டு வருகிறது. 12 முனைவர் பட்ட ஆய்வுகள் நிறைவுசெய்யப் பட்டுள்ளதோடுதற்போது 14 ஆய்வாளர்கள் பகுதிநேரமாக முனைவர்பட்ட ஆய்வு மேற் கொண்டு வருகின்றனர்.

சிறந்த ஆய்வு நூல்கள் வெளியிடுதல், ஆய்வுக்கட்டுரைகள் வெளியிடுதல் என தமிழ் ஆய்வியலுக்கு இத்துறை பெரும் பங்களிப்பு செய்து வருகிறது. பணியாற்றிய, பணியாற்றும் பேராசிரியர்கள் குடியரசுத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர்கள்.

பேராசிரியர்களின் திறம்படக் கற்பித்தல் வழி ஆண்டுதோறும் சிறப்பான தேர்ச்சி விகிதம்வழங்கி வருவதோடு மாணவர்களின் வளர்ச்சிக்காகப் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வருகின்றது. பல்வேறு கருத் தரங்குகள், பயிலரங்குகள் ஒருங்கிணைத்து மாணவர்களின் ஆற்றல் பெருக பல வழிவகைகளைச் செய்து வருகிறது. தொடர் பணிகள் வழியாக இவ்வாறு பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்து வரும் தமிழ்த்துறை சென்ற கல்வியாண்டில் (ஜூன் 2020 – மே 2021) சிறப்பான செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

## தமிழ் அவையும் கவிமாலையும்

மாதம்தோறும் முனைவர்பட்ட ஆய்வாளர் கள், பேராசிரியர்கள் கட்டுரை வாசிப்பதற் காகத் தமிழ் அவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது.

மாணவர்களின் கவிதைத் திறனை வளர்க்க கவிமாலை என்னும் அமைப்பு செயல்பட்டு வருகின்றது. இதன் மூலம் மாணவர்கள் பலர் தங்கள் கவிதை நூல்களை வெளி யிட்டுள்ளனர்.

## தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

| பெயர் | பணி | தகுதி விவரம் | பணி அனுபவம் |
|---|---|---|---|
| முனைவர் பா. ஜெய்கணேஷ் | துறைத் தலைவர் | M.A., Ph.D., NET - JRF | 12 |
| முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி | உதவிப் பேராசிரியர் | M.A., MPhil., Ph.D | 22 |
| முனைவர் சு. சரஸ்வதி | உதவிப் பேராசிரியர் | M.A., MPhil., SET, Ph.D | 10 |
| முனைவர் தா. ஜெயந்தி | உதவிப் பேராசிரியர் | M.A., MPhil., NET, Ph.D | 6 |
| முனைவர் ந. இரஞ்சன் | உதவிப் பேராசிரியர் | M.A. MPhil. NET, Ph.D | 9 |

## ஆய்வு நெறியாளர்கள்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் ஐவரும் முனைவர்பட்ட நெறியாளர்களாக மாணவர் களை நெறிப்படுத்தி வருகின்றனர்.

தற்போது பதினான்கு ஆய்வாளர்கள் தமிழின் பல்வேறு களங்களில் ஆய்வுமேற்கொண்டு வருகின்றனர்.

## கருத்தரங்கம்/ பயிலரங்கம் ஒருங்கிணைப்பு

2020/2021

- **தமிழும் இணையமும்,** தமிழ்ப்பேராயம் வழியாகத் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்தியது, ஐந்து பன்னாட்டு இணைய வழிப் பயிலரங்கம், நாள்: 25 -29/08/2020.







- **திருக்குறள் பன்னாட்டுக் கருத்தரங்கம்,** தமிழ்ப்பேராயம் வழியாகப் பன்னாட்டுத் திருக்குறள் அமைப்புடன் இணைந்து நடத்தியது, செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 03/2020. ஆஸ்திரேலியா பாராளு மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட இக் கருத்தரங்கம் அதற்கான சான்றிதழையும் பெற்றுள்ளது.





PARLIAMENT NSW

LEGISLATIVE ASSEMBLY

HANSARD

15 OCTOBER 2020

COMMUNITY RECOGNITION STATEMENT

INTERNATIONAL CONFERENCE ON THIRUKKURAL

**Dr HUGH McDERMOTT (Prospect):** The Electorate of Prospect is home to a vibrant Australian Tamil community. The Tamil community has a rich and ancient heritage which is celebrated annually at the International Conference on Thirukkural. The event is based on the classic Tamil text of Thirukkural.

The Thirukkural, composed by Academic Thiruvalluvar, is one of the two oldest works known to exist in Tamil literature. This classic text is used as a guide to address various conflicts whilst promoting peace and harmony. Due to the COVID-19 Pandemic, this year's Conference on Thirukkural and Multiculturalism was hosted online. The five-day Conference commenced on 20th September 2020.

I was honoured to participate in the online event and joined Guests of Honour, Professor Armoogum Parsuramen, President of the International Thirukkural Foundation, Mr Thiru Thirunanda Kumar, 'Thirukkural and Youth' representative, Dr. Chandrika Subramaniyan, Conference Director and Dr Jai Ganesh, Programme Director. I would like to thank the International Thirukkural Foundation (Mauritius) and the SRM Institute of Science and Technology, for co-hosting the informative event. I look forward to joining the Tamil community in person to celebrate their vibrant and unique culture.

Hugh McDermott MP
State Member for Prospect

- **உ.வே.சா. என்னும் ஆளுமை,** உ.வே.சா. அவர்கள் பிறந்தநாள் கருத்தரங்கம், நாள்: 19/02/2021.
- **உலகத் தாய்மொழி நாள்,** உலகத் தாய்மொழிநாள் கருத்தரங்கம், நாள்: 19/02/2021.







## ஆய்விதழ்களில் கட்டுரை வெளியீடு

| வ.எண் | இதழ்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஸ்கோபஸ் இதழ்கள் ( Scopus Index Journals) | 5 |
| 2 | யூஜிசி ஆய்விதழ் | 5 |

- தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் கட்டுரைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஸ்கோபஸ் இதழ்களில் வெளியிட்டு வருகின்றனர்.

## விருதுகள்

முனைவர் பா. ஜெய்கணேஷ்,

சாதனையாளர் விருது - தற்போதைய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்ட விருது, 26/02/2021



- குறள் நெறிக் காவலர் விருது, உலகத் திருக்குறள் மூன்றாவது மாநாடு, தஞ்சாவூர், 27/02/2021.



## கருத்தரங்கம்/ பயிலரங்கம் சிறப்பு வல்லுநராகப் பங்கேற்பு

| வ. எண். | சிறப்பு வல்லுநர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முனைவர் பா. ஜெய்கணேஷ் | 25 |
| 2. | முனைவர் ந.இரஞ்சன் | 2 |

## குறிப்பிடத்தக்க சில

### முனைவர் பா. ஜெய்கணேஷ்

- பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பதிப்புச் சூழல், தமிழ் இலக்கணப் பதிப்புகள், சுவடியியல் சிறப்புப் பயிற்சிப் பட்டறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, நாள் – 05/03/2021.
- தொல்காப்பிய உரை மரபுகள், தொல் காப்பியப் பதிப்புகளும் பதிப்புரைகளும், செம்மொழித் தமிழாய்வுப் பயிலரங்கம், செம் மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், நாள். 27/03/2021



- தமிழ்ச் செவ்வியல் நூல்களின் முதல் பதிப்பு கள்,சி.வை.தா.வும் செவ்வியல் பதிப்பு களும், செம்மொழித் தமிழாய்வுப் பயிலரங் கம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், நாள். 18/04/2021



### முனைவர் ந. இரஞ்சன்

- தமிழெங்கள் உயிருக்கு நேர், இணைய வழிக் கருத்தரங்கம்,எஸ்.என்.எஸ். கலை அறிவியல் கல்லூரி, கோவை. நாள்: 24/02/2021




- கற்க கசடற, இணையவழிக் கருத்தரங்கம், கே.பி.ஆர். கலை அறிவியல் கல்லூரி, கோவை. நாள்: 04/05/2021



## கருத்தரங்கம், பயிலரங்கம் பங்கேற்பு

சென்ற கல்வியாண்டில் இணைய வழி ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட பல்வேறுபட்ட கருத்தரங்கு, பயிலரங்குகளில் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்கள் அதிகம் பங்கெடுத் தனர்.

### முனைவர் தா. இரா. ஹெப்சிபா பியூலா சுகந்தி




### முனைவர் சு.சரஸ்வதி




### முனைவர் தா. ஜெயந்தி




### முனைவர் ந. இரஞ்சன்




## ஆராய்ச்சி நாள்

எஸ்.ஆர்.எம். கல்வி நிறுவனம் ஆண்டு தோறும் ஆராய்ச்சி நாள் என்ற ஒன்றை ஒருங்கிணைத்து வருகிறது. இந்நாளில் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரை வாசித்து சிறந்த கட்டுரை களுக்கு பதக்கமும் சான்றிதழும் நிறுவன வேந்தர் அவர்களின் கைகளால் வழங்கப்படுகிறது



ஆராய்ச்சி நாளிற்காக வாசிக்கப்பட்ட கட்டுரைகளை மதிப்பிட்ட பேராசிரியர்களுக்கு சிறப்பு செய்தல்

## பிற செயல்பாடுகள்

### முனைவர் பா. ஜெய்கணேஷ்

- பொதிகைத் தொலைக்காட்சியின் தமிழோடு விளையாடு நிகழ்ச்சியின் நெறியாளராக இருபத்தைந்திற்கும்மேற்பட்ட நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பு செய்துள்ளமை.




- திருச்செங்கோடு விவேகானந்தா கலை அறிவியல் கல்லூரியின் பாடத்திட்டக் குழுவில்உறுப்பினராக இடம்பெற்றமை.
- சான்லாக்ஸ், வல்லமை ஆகிய இதழ் களின் ஆசிரியர் குழுவில் இடம் பெற்றமை.
- இயல்பாய் என்னும் குறும்படத்தின் இணை இயக்குநராகப் பணிசெய்துள்ளமை.

## தமிழ்த்துறையும் குடியரசுத் தலைவர் இளம் ஆய்வறிஞர் விருதும்

### மேனாள் பேராசிரியர்கள்

முனைவர் ஆ. மணவழகன்

(2007 – 2008 ஆம் ஆண்டிற்கான விருது)

முனைவர் க. சுந்தரபாண்டியன்

(2010 – 2011 ஆம் ஆண்டிற்கான விருது)

### தற்போது பணிபுரிபவர்

முனைவர் பா. ஜெய்கணேஷ்

(2012 – 2013 ஆம் ஆண்டிற்கான விருது)



முனைவர் ஆ. மணவழகன்



முனைவர் க. சுந்தரபாண்டியன்



முனைவர் பா. ஜெய்கணேஷ்